அதற்கு வேண்டிய துணைப்பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து கிடைக்க வேண்டியது கிடைக்காததால், துணைப் பொருள்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை உற்பத்தி செய்கிற வர்கள் இந்த அரசாங்கத்தின் உதவியைக் கோரினால், இயன்ற அளவில் ஆதரவெல்லாம் அதற்கு அளிக்கப்படும்.

Dhrangadra Chemical Works—State aid to

*1789 Q.—SRI. V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லாவில் நடைபெறும் தரங்கத்ரா ரசாயன தொழிற்சாலைக்கு ராஜ்ய சர்க்கார்களின் உதவி ஏதாவது கொடுக்கப்பட் டுள்ளதா ? அப்படியானால் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of Madras have taken shares to the value of Rs. 10 lakhs in the Dhrangdhra Chemical Works, Limited, which has set up a caustic soda factory in Tirunelveli district.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார் இந்தத் தொழிற் சாலையில் எல்லாம் வட இந்தியர்களைக் கொண்டே நடத்தப்படுகிறது, தென்னிந்தியர்களே இல்லை என்ற அதிருப்தி இருக்கிறது. அங்கு சென்ற காங்கிரஸ் எம். எல். ஏக்கள் எல்லோரிடத்திலும் சொன்னார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு ஒன்று தெரியும். தென்னிந்தியர்கள் ஒருவர்கூட இல்லை என்பது உண்மையில்லை என்று.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முதலாளி நடத்தும் இந்தத் தொழிற்சாலைக்கு 10 லட்ச ரூபாய் வரை மூலதனம் சர்க்கார் கொடுக்கக் காரணம் என்ன, எந்த அடிப்படையில் உதவி செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ஒரு முக்கியமான தொழில். தூத்துக்குடி பக்கத்தில் மூலப் பொருள் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி இதை உற்பத்தி செய்ய வேண்டும். அப்பொழுது நான் தொழில் இலாகா பொறுப்பு வகித்து வந்தேன். தமிழ் நாடு பூராவிலும் தொழில் அதிபர்களுக்குக் கடிதம் எழுதி, இந்தத் தொழிலை யாராவது எடுத்து நடத்துவார்களா என்று கேட்டேன். எல்லோரும் எங்களால் முடி யாது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஒருவர் வருகிறார் என்றால், அதற்கு பூரா மூலதனமும் போடமுடியவில்லை. இதை விஸ்தரிப் பதால், தமிழ் நாட்டின் பொருளாதார நிலை உயரும். இம்மாதிரி இருக் கும் தொழிலில் முதல் போடுவது என்பது அரசாங்கத்தின் கொள்கை ; நோக்கமும் ஆகும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், உற்பத்தி தொடங்கி ஒரு வருஷம் ஆகிவிட்டதே. அது லாபகரமாக நடக்கிறதா, சர்க்கார் பங்குத் தொகைக்கு லாபம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Jaggery—Export of

*1790 Q. SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலிருந்து வெல்லம் ஏற்றுமதியை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது உண்மையா ?

23rd September 1961]

(இ) எந்தத் தேதியிலிருந்து எந்தத் தேதிவரை ? காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

DEPUTY SPEAKER : Question No. 1790-B.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இது ஒரு முக்கியமான கேள்வி (கே.1790). இதனால் விவசாயிகள் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் உப கேள்வி அலவ் பண்ண வேண்டும்.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் முன்பே தயாராக இருந்திருக்க வேண்டும். ஏற்கனவேயே சொன்னேன், தாங்கள் ஒரு ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின் கொடுங்கள் என்று.

(ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் எழுந்தார்.)

DEPUTY SPEAKER : சரி ஒரு உப கேள்வி அனுமதிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : " நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது உண்மையா ? " என்று கேட்டதற்கு " நோ " என்று சொல்லி விட்டார்கள். என்ன காரணம் ? இதனால் பெரிய அளவுக்கு விவசாயிகள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் கேள்விப்படுகிறேன், பாரின் எக்ஸ்சேஞ்ச் காரணமாகத்தான் தடைபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்குத் தகுந்தாற்போல ஏற்றுமதி செய்ய முயற்சிகள் என்ன என்ன எடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: "ஏற்றுமதி நம் நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு நிறுத்தப்பட்டுள்ளதா " என்றதற்கு " இல்லை " என்று சொன்னேன். ஆனால் அந்த வேறு நாடு தன் இறக்குமதியை நிறுத்தி இருக்கிறது. அவர்களுக்கு அன்னியச் செலாவணி இல்லை என்று உங்கள் வெல்லம் வேண்டாம் என்று சொல்லி நிறுத்தியிருக்கிறார்கள். வாங்குங்கள் என்று எப்படி வற்புறுத்த முடியும் ? நம் ஊரில் இருக்கிறவர்கள் அஸ்கா சர்க்கரை தான் வேண்டும் என்கிறார்கள். அன்னிய நாட்டினரை வாங்கித்தான் ஆக வேண்டும் என்று எப்படிச் சொல்வது ? அன்னிய நாட்டுச் செலாவணி குறைவாக இருக்கிறது. உங்கள் வெல்லம் வேண்டாம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

Transport Corporation.

* 1790-B *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Union Government have advised this Government to form a Transport Corporation; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir,

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that State Transport Corporations have been formed in other States under the recommendation of the Government of India and if so, will a State Transport Corporation be formed in our State also?

THE HON SRI V. RAMAIAH : The forming of a Corporation is a matter which the State Government have to decide. Here the main question is, whether the Government of India have advised us and my reply is, ' No '.